கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளம்

* 61 வின.—திரு. எம் முத்தையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கயத்தாறுக்கு அருகிலுள்ள விமான தளத்தை விமானப் பயிற்சி நிலையமாக்குவது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து மாநில அரசுக்கு தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, இந்தக் கயத்தாறு விமான தளத்தை அபிவிருத்திசெய்தால், தூத்துக்குடி துறைமுகத்திற்கும், கோவில் பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திற்கும் போக்குவரத்து வசதி ஏற்படும். ஏற்கனவே தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஒரு விமான வசதி ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய சர்க்கார் ஆலோசித்துக் கொண்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்த கயத்தாறு தளத்தை விருத்திசெய்வதில் நம் அரசாங்கத்திற்கு செலவு இல்லாமல் செய்யலாம் என்று கருதுகிறேன். ஆகையால், மாநில அரசு மத்திய அரசோடு இதுபற்றிப் பேசி, சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகே ஒரு விமானநிலையம் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது. இந்தக் கயத்தாறு தளத்தை உபயோகிக்கும் செயற்குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தூத்துக்குடிக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் ஏர்-ஸ்ட்ரிப் அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது என்கிறார்கள். அது எவ்வளவு சீக்கிரத்தில் அமைக்கப்படும்? அதுபற்றி, மத்திய சர்க்காரை வலியுறுத்த நம் அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். இந்த விமான தளத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

Export of Bananas

* 62 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to have a special drive for the export of Bananas from this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) வாழைப்பழ உற்பத்தியைப் பெருக்கவும், இப்பயிர் சாகுபடியாகும் பரப்பை அதிகரிக்கவும், தீவிரசாகுபடித் திட்டமொன்று வட ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, கோயம்